. **நீதித்துறை நடுவர் எண்.II நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்**
**முன்னிலை திரு.சி. பாரதி, பி.ஏ., பி.எல்.,எம்.ஜே.எம்.சி.,**
**நீதித்துறை நடுவர் எண்–II, ஸ்ரீவில்லிபுத்தூர்.**
**2024–ம் ஆண்டு ஜுலை மாதம் 12–ம் நாள் வெள்ளிக்கிழமை**
**சி.ஆர்.எம்.பி.எண்.6108/2019**
**in**
**C.C. No.267/2015**

முத்துக்குமார் (எ) அஜித்குமார் (A3)
த/பெ.காசிராஜன், .... மனுதாரர்/ எதிரி.

–எதிர்–

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
வன்னியம்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண்.114/2013 ...... எதிர்மனுதாரர்/ குற்றமுறையீட்டாளர்.

இம்மனு 31.10.2019ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/3ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.இராக்கப்பன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/ குற்ற முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை.II அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

இம்மனு மனுதாரர்/எதிரிக்கு சம்பவ தினத்தன்று வயது 16 வருடம், 10 மாதம், 4 நாட்களாக இருப்பதால் இளஞ்சிறார் என்று தீர்மானித்து தாவா வழக்கை மனுதாரர் / 3ம் எதிரியை பொறுத்து இளஞ்சிறார் நீதிமன்றத்திற்கு மாறுதல் (Transfer) செய்து உத்தரவிடக்கோரி இளஞ்சிறார் நீதிச்(பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் பிரிவு 7A(1)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இவ்வழக்கின் மனுதாரர் / 3ம் எதிரி மற்றும் நான்கு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 457, 380ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு, வழக்கு நிலுவையிலிருந்து வருவதாகவும், மனுதாரர் / 3ம் எதிரி 10.06.1996ம் தேதி பிறந்துள்ளதால், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 14.03.2013ம் தேதியன்று மனுதாரருக்கு 16 வருடங்கள், 10 மாதங்கள், 4 நாட்களே பூர்த்தியடைந்துள்ளதால், மனுதாரர் / 3ம் எதிரி சம்பவ காலத்தில் இளஞ்சிறார் என்பதால், இளைஞர் நீதி குழுமத்தின்

C BHARATHI
Digitally signed by C BHARATHI
Date: 2024.07.12 13:39:37 +0530

மூலமே விசாரிக்க இயலும் என்றும், மனுதாரர் / 3ம் எதிரி மீதான வழக்கை பொறுத்து மட்டும் இளைஞர் நீதி குழுமத்திற்கு மாறுதல் செய்து உத்தரவிட வேண்டுமென மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

**3)** எதிர்மனுதாரர் தரப்பில், வழக்கு ஆவணம் மற்றும் முகாந்தரங்களின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென வாதிடப்பட்டது. இவ்வழக்கின் சம்பவம் 14.04.2013ம் தேதி நடந்துள்ளதாக குற்ற இறுதியறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் / 3ம் எதிரி தரப்பில் மனுதாரர் 10.06.1996ம் தேதி பிறந்ததாக அவரது பிறப்பு சான்றிதழ் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** மனுதாரர் / 3ம் எதிரியின் பிறப்பு சான்றிதழின் அடிப்படையில் பார்க்கும்போது, சம்பவ தினமான 14.04.2013ம் தேதியில் மனுதாரருக்கு 16 வருடங்கள், 10 மாதங்கள், 04 நாட்களே பூர்த்தியடைந்துள்ளது என்பதும், மனுதாரர் / 3ம் எதிரி சம்பவ காலத்தில் இளஞ்சிறார் என்பதும், அறிய முடிகிறது. மனுதாரர் / 3ம் எதிரி சம்பவ காலத்தில் இளஞ்சிறார் என்பதால் இளைஞர் நீதி குழுமத்தின் மூலமே அவர் மீதான வழக்கை விசாரிக்க இயலும்.

**5)** இம்மனுவின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், சம்பவ காலத்தில் மனுதாரர் / 3ம் எதிரி இளஞ்சிறார் என்பதால், அவருக்கு எதிரான வழக்கை இளைஞர் நீதி குழுமத்தின் மூலமே விசாரிக்க இயலும் என்பதாலும், நீதியின் நலன் கருதியும், மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6)** முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்/3ம் எதிரியின் மீதான வழக்கு சம்மந்தமான ஆவணங்களை இளைஞர் நீதி குழுமம், விருதுநகருக்கு இந்நீதிமன்ற தலைமை எழுத்தர் அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2024ம் வருடம் ஜுலை மாதம் 12ம் தேதி இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

C BHARATHI

Digitally signed by C BHARATHI
Date: 2024.07.12 13:39:43 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.